சிங்கப்பூர்
இலக்கியப்
பரிசு 2020

செய்தி
வெளியீடு

#WhyWeWrite

as reverie
meditation
love

to reveal
reconstruct
dream new
realities

for awareness
community
those without
a voice

2020 Singapore Literature Prize

உடனடி வெளியீட்டுக்காக

எஸ். எல். பி 2020 இறுதிப்பட்டியல் அறிவிப்பு

மெய்நிகர் விருது வழங்கும் விழா

சிங்கப்பூர், 22 ஜூலை 2020 - சிங்கப்பூரின் சிறந்த இலக்கிய விருது, பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட இரண்டிற்கு ஒரு முறை வழங்கப்படும் சிங்கப்பூர் இலக்கிய பரிசு (எஸ். எல். பி)-க்காக **மொத்தம் 52 படைப்புகள் பட்டியலிடப்பட்டுள்ளன.** எஸ். எல். பி வரலாற்றில் முதல் முறையாக, விருது வழங்கும் விழா ஆன்லைனில் **27 ஆகஸ்ட் 2020 அன்று இரவு 8 மணிக்கு** எஸ். பி. சி-யின் ஃபேஸ்புக் (Facebook) மற்றும் யூடியூப் (Youtube) வழியாக நடைபெறும்.

கவிதை, புதினம் மற்றும் இலக்கியப் புதினம் அல்லாதவை ஆகிய மூன்று வகைகளிலும், சீன, ஆங்கிலம், மலாய் மற்றும் தமிழ் ஆகிய நான்கு மொழிகளிலும் **52 படைப்புகள் 12 பிரிவுகளில்** இறுதிப்பட்டியலிடப்பட்டுள்ளன. இந்த பிரிவுகளில் சிறந்த விருதுக்கு வழங்கப்படும் $3,000 ரொக்கப் பரிசு மற்றும் சிறப்பு பதக்கத்துக்காக மொத்தம் 47 எழுத்தாளர்கள் போட்டியிடுவார்கள். பாதிக்கும் மேற்பட்ட எழுத்தாளர்கள் (30) முதல் முறையாக இறுதிப்பட்டியலிடப்பட்டுள்ளனர், அதே நேரத்தில், ஐந்து பேர் இரண்டு வெவ்வேறு பிரிவுகளில் போட்டியிடுவார்கள்.

#WhyWeWrite, “நாம் ஏன் எழுதுகிறோம்” என்ற கருப்பொருளைக் குறிக்கும் எஸ். எல். பி-யின் இந்த பதிப்பானது, ஒரு புதிய பிரிவின் அறிமுகத்தையும் காண்கிறது: எஸ். எல். பி வாசகர்களின் விருப்பம். சீன, ஆங்கிலம், மலாய் மற்றும் தமிழ் மொழிகளில் தங்களுக்கு பிடித்த இறுதிப்பட்டியலிடப்பட்ட புத்தகத்திற்கு ஆன்லைனில் வாக்களிக்க பொதுமக்கள் அழைக்கப்படுகிறார்கள். வென்ற எழுத்தாளர்கள் ஒவ்வொருவருக்கும் $1,000 ரொக்கப் பரிசு கிடைப்பதோடு, அவர்களுடைய வாக்காளர்கள் புத்தக பற்றுச் சீட்டுகளை வெல்லும் வாய்ப்பைப் பெறுவார்கள்.

நோய் பரவுதலால் நிதி ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள போதிலும், சிங்கப்பூர் புத்தக மன்றம் இந்த ஆண்டு எஸ். எல். பி-யை தொடர்ந்து நடத்த முடிவு செய்துள்ளது. எஸ். பி. சி-யின் நிர்வாக இயக்குனர் வில்லியம் புவான் கூறுகிறார், “இடையூறு, தனிமை மற்றும் பதட்டம் அனைத்திற்கும் இடையில், புத்தகங்களும் இலக்கியமும் முன்னெப்போதையும் விட மிக முக்கியமானவை என்று நாங்கள் நம்புகிறோம். எங்கள் எழுத்தாளர்களின் குரல்களையும், அவர்களின் பங்களிப்புகளையும் சாதனைகளையும் அங்கீகரித்து கொண்டாடுவது முக்கியம். அவர்களின் சொற்களும் கதைகளும் நம்மை வளர்ப்பது மட்டுமல்லாமல், விமர்சன ரீதியாக சிந்திக்க எங்களுக்கு சவால் விடவும், கற்பனையின் உயரத்திற்கு செல்ல எங்களுக்கு ஊக்கமளிக்கவும், பச்சாத்தாபத்தின் கோர்வை மூலம் எங்களை இணைக்கவும் செய்கின்றன.”

எஸ். எல். பி 2020 பல்வேறு பிரிவுகளில் மொத்தம் 224 சமர்ப்பிப்புகளைப் பெற்றது, இது 2018-டின் 172 சமர்ப்பிப்புகளை விட 30% அதிகரிப்பு. 12 பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்ட 2014-ஆம் ஆண்டு முதல் இன்றுவரை, கவிதை மற்றும் இலக்கியப் புதினம் அல்லாதவை வகைகள் முறையே 67 மற்றும் 85 படைப்புகளைக் கொண்டு 2014 ஆண்டு முதல் இன்று வரை கண்ட சமர்ப்பிப்புகளிலேயே அதிக எண்ணிக்கையைக் கண்டன. இறுதிப்பட்டியலிடப்பட்ட படைப்புகள் பரந்த அளவிலான தலைப்புகளை உள்ளடக்கியது, மேலும் பல்வேறு தலைமுறை எழுத்தாளர்களைக் பிரதிநிதிக்கின்றன.

→ தமிழ் படைப்புகளின் முழு இறுதிப்பட்டியலுக்கு இணைப்பு A மற்றும் B, மற்றும் தீர்ப்பளிக்கும் குழுவினர்களுக்கு இணைப்பு C-ஐப் பார்க்கவும்.

→ ஆங்கிலம், சீன மற்றும் மலாய் பிரிவுகளில் பட்டியலிடப்பட்ட எழுத்தாளர்கள், புத்தகங்கள் மற்றும் நீதிபதிகள் பற்றிய கூடுதல் தகவல்களை இங்கே பதிவிறக்கம் செய்யலாம்.

Singapore Book Council (Company No.: 201805935W)
90 Goodman Road, Blk E #03-32, Goodman Arts Centre Singapore 439053
+ 65 6342 5119 | info@bookcouncil.sg | www.bookcouncil.sg

Singapore Literature Prize 2020

as

reverie
meditation
love

to

reveal
reconstruct
dream new
realities

for

awareness
community
those without
a voice

#WhyWeWrite

2020 Singapore Literature Prize

Awards Ceremony Webcast

27 August 2020 Thur, 8pm

Celebrating outstanding literary works in Singapore

#WhyWeWrite (நாம் ஏன் எழுதுகிறோம்)

மெய்நிகர் விருதுகள் விழாவுக்கு முன்னதாக, #AtHomeWithSLP (வீட்டிலிருந்தபடி எஸ். எல். பி) எனும் கருப்பொருளின் அடிப்படையில் குழு விவாதங்கள் தொடர் ஆன்லைனில் நடைப்பெறும். வீடு, வரலாறு, பன்முகத்தன்மை மற்றும் நெருக்கடியில் எழுத்தாளர்களின் பங்கு போன்ற நமது காலத்திற்கு பொருத்தமான சிந்தனையைத் தூண்டும் தலைப்புகளைக் கையாளும் எஸ். எல். பி-யின் இறுதிப்பட்டியலிடப்பட்ட எழுத்தாளர்களை, இந்த இலவச நிகழ்ச்சிகள் கொண்டிருக்கும்.

எஸ். எல். பி 2020 விருது வழங்கும் விழா

தேதி:
27 ஆகஸ்ட் 2020, இரவு 8 மணி எஸ்.ஜி.டி.

இடம்:
ஆன்லைனில் எஸ். பி. சி-யின் ஃபேஸ்புக் (Facebook) மற்றும் யூடியூப் (YouTube) பக்கங்களில்

விழாவிற்கு பொதுமக்கள் இங்கு பதிவு செய்யலாம்.

→ மேலும் விவரங்களுக்கு, https://bookcouncil.sg/awards/singapore-literature-prize -ஐப் பார்வையிடவும்

→ நிகழ்ச்சிகள் மற்றும் விருது வழங்கும் விழா பற்றிய கூடுதல் தகவல்கள் வரும் நாட்களில் இணையதளத்தில் சேர்க்கப்படும்.

→ ஊடக தொடர்பான தகவல்களுக்கு, தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்:
ஈதன் லியோங்
Ethan Leong
ethan@bookcouncil.sg

எஸ். எல். பி 2020 தமிழ் பிரிவுகள்

கவிதை

இறுதிப்பட்டியலிடப்பட்ட மூன்று தமிழ் கவிஞர்கள், சமகால குரல்கள் மற்றும் நிறுவப்பட்டவர்களின் கலவையைக் கொண்டுள்ளனர். சுபா செந்தில்குமார் தனது முதல் வெளியிடப்பட்ட கவிதைத் தொகுப்பைக் கொண்டு முதல்முறையாக இறுதிப்பட்டியலில் இடம் பிடித்திருக்கிறார். இவருடன், எஸ். எல். பி சிறப்பு மற்றும் பாராட்டு வெற்றியாளர் (2016) அ.கி. வரதராசனும், பரீட்சார்த்த மற்றும் பன்மொழி கவிதைகளை பிண்ணும் தொகுப்பினை வழங்கிய எஸ். எல். பி வெற்றியாளர் (2016) சித்துராஜ் பொன்ராஜும் இறுதிப்பட்டியலில் இடம் பிடித்திருக்கிறார்கள். திரு. அ. கி. வரதராசன் இலக்கியப் புதினம் அல்லாதவை பிரிவிலும் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

நீதிபதிகளின் கருத்து:
''மூன்று கவிஞர்களும் தனித்துவமான எழுத்து நடைகளைக் கொண்டுள்ளனர். அவர்களின் தனிப்பட்ட கவிதைத் தொகுப்புகள் சிறந்து விளங்குகின்றன. மூன்று எழுத்தாளர்களும் சிங்கப்பூரில் தமிழ் இலக்கியத்தின் எல்லைகளைத் தள்ளி, தொடர்ந்து தங்கள் படைப்புகளைப் பரிசோதனை செய்து வருவதால் இது பாராட்டத்தக்க முயற்சி என கூறலாம். மூன்று எழுத்தாளர்களும் மொழியின் மீது வலுவான பிடிப்பைக் கொண்டுள்ளனர் மற்றும் புதிய கவிதை வடிவங்களை பரிசோதிப்பதில் திறமையானவர்கள். விதிவிலக்கான படைப்புகளை உருவாக்கி சிங்கப்பூர் கவிஞர்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமைகிறார்கள்.''

இலக்கியப் புதினம் அல்லாதவை

ஜப்பானிய ஆக்கிரமிப்பு முதல், சிங்கப்பூர் மற்றும் மலேசியாவில் உள்ள தமிழ் இலக்கிய வரலாறு வரை, கம்பராமாயணத்தை பகுப்பாய்வு செய்வதன் மூலம் தெய்வீகத்தில் மனிதகுலத்தை ஆராய்வது வரை பல தலைப்புகளை உள்ளடக்கியது, இந்த ஐந்து இறுதிப்பட்டியலிடப்பட்ட படைப்புகள். அ.கி. வரதராசன், சுப்ரமணியன் பாலா பாஸ்கரன் (2018 இல் வென்றவர்), பிச்சினிக்காடு இளங்கோ, அவர்களுடன் முதல் முறையாக இறுதிப்பட்டியலிடப்பட்ட எழுத்தாளர்கள் அழகுநிலா மற்றும் வ. ஹேமலதா ஆகிய எழுத்தாளர்கள் அடங்குவர்.

நீதிபதிகளின் கருத்து:
"நடுவர்களால் இறுதிப்பட்டியலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட புத்தகங்கள் அனைத்தும் மிக நேர்த்தியான முறையில் எழுதப்பட்டுத் தமிழ்கூறும் நல்லுலகிற்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளன. ஒவ்வொரு புத்தகமும் அதன் கருத்தினாலும் எழுதப்பட்ட முறையாலும் தனித்துவம் பெற்றதாக இருக்கின்றது. இந்நூல்கள் புனைகதை அல்லாத இலக்கிய வகைகளாக வகைப்படுத்தப் பட்டிருந்தாலும் ஒரு புதினத்தைப் படிப்பதைப் போன்ற விறுவிறுப்பையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தும் வண்ணம் இந்நூல்களின் எழுத்து நடை உள்ளது. அதனால் இந்நூல்கள் வாசகர்களைக் கவர்ந்திழுக்கும் தன்மை கொண்டவையாக உள்ளன. மேலும் இப்புத்தகங்கள் அனைத்தும் மிகுந்த ஆராய்ச்சிக்குப் பிறகு கடின உழைப்பால் வடிவமைக்கப்பட்டவையாகும். சில புத்தகங்கள் சிங்கப்பூரின் வரலாற்றையும் மரபையும் பிரதிபலிப்பவையாக உள்ளன."

புதினம்

புதினத்திற்கான மூன்று இறுதிப்பட்டியலிடப்பட்ட படைப்புகள், சிங்கப்பூரில் உள்ள தமிழ் சமூகத்தின் வாழ்ந்த அனுபவங்களை ஆழமாக ஆராய்கின்றன. கவிதைக்காகவும் இறுதிப்பட்டியலிடப்பட்ட எஸ். எல். பி வெற்றியாளர் (2016) சித்துராஜ் பொன்ராஜ், இந்தியாவுக்கும் சிங்கப்பூருக்கும் இடையில் ஒரு கதாநாயகனின் சாத்தியமான நல்லிணக்கத்தை விவரிக்கும் "மரயானை"-க்காக இப்பட்டியலில் இடம் பிடித்திருக்கிறார், இதேபோல் சிங்கப்பூரில் உள்ள தமிழ் சமூகத்தின் வாழ்க்கையை ஆராய்கின்றன எம்.கே. குமாரின் சிறுகதைகள், அதே நேரத்தில் யூசுப் ராவுத்தர் ராஜீத்தின் படைப்பு சிங்கப்பூரிலும் இந்தியாவிலும் பிறந்த இந்தியர்களிடையே உள்ள பிளவு குறித்து ஆராய்கிறது.

நீதிபதிகளின் கருத்து:
சிங்கப்பூர் இலக்கியப் பரிசு 2020, தமிழ் புதினப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற நூல்களில் பலவும் எழுத்தில் முன்னேற்றமும், கலை வெளிப்பாட்டில் முதிர்ச்சியையும் பெற்ற குறிப்பிடத்தக்க படைப்புகள். எழுத்தாளர்கள் புதிய கருப்பொருட்களை, வடிவங்களை, எழுத்துபாணிகளை முயன்றிருக்கிறார்கள். சிங்கை வாழ்வின், சமூகத்தின் இதுவரை சொல்லப்படாத, கவனிக்கப்படாத அம்சங்களை வெளிப்படுத்தி சிங்கைத் தமிழ் வாழ்க்கை குறித்த தம் பார்வையைச் சொல்வதில் அவர்கள் வெற்றி கண்டுள்ளார்கள் என்பதைக் காண மகிழ்ச்சியாக உள்ளது. இந்த எழுத்தாளர்களின் தேடல் இன்னும் தொடர்கிறது. அது தொடர்ந்து பரிணமித்து வரும் ஒன்று என்பதைக் குறிப்பிட வேண்டும்.

'மரயானை' வயோதிகத்தை நெருங்கும் ஒரு சமூகத்தின் அக்கறைகளையும் அபிலாஷைகளையும் ஒரு புதுமையான பாங்கில் விசாரணைக்குட்படுத்தும் நூலாகும். "வண்டியும் ஒருநாள் ஓடத்தில் ஏறும்" நூல் சிந்தனாபூர்வமாய் நளினமாய் எழுதப்பட்டு மானுட நம்பிக்கையை மேலெடுக்கிறது. இந்த இரு நூல்களும் தமக்கே உரிய தனித்தன்மையுடன், ஒன்றையொன்று பரஸ்பரம் ஈடுசெய்வதாக இருக்கிறது. பேசாப் பொருளைப் பேசுவதாகவும், சமூகத்தின் பார்வையில் சட்டென்று படாத ஒரு தரப்பினரைக் கொண்டாடுவதாகவும் உள்ள "ஓந்தி" குறிப்பிடத்தகுந்த ஒரு படைப்பு.

இணைப்பு B

எஸ். எல். பி 2020 இறுதிப்பட்டியல் (தமிழ் பிரிவுகள்)

பிரிவு: கவிதை

எண்.	எழுத்தாளர் / கதை தலைப்பு	சுயவிவரம்	கதை சுருக்கம்
1	அ. கி. வரதராசன் "ஏற்றம் அளித்த இருநூறு" (Vanathi Pathippakam, 2019) 	அ.கி. வரதராசன் தமிழ்நாட்டில் 1944ஆம் ஆண்டு பிறந்தவர். சிங்கப்பூரில் வேலையேற்க 1982 இல் வந்தவர். கடந்த 25 ஆண்டுகளாக, சிங்கப்பூர் குடிமகனாக வாழ்ந்து வருகிறார். மரபுக் கவிதைகள் எழுதுபவர். இவரது மரபுக் கவிதை நூல்கள் சிங்கையில் பல பரிசுகளைப் பெற்றுள்ளன. கம்பனை ஆய்வு செய்து பல நூல்களை எழுதியுள்ளார்.இந்நூல்கள் தமிழ்நாட்டிலுள்ள கம்பன் கழகங்களால் அவர்கள் நடத்தும் கம்பன் விழாக்களில் வெளியீடு கண்டு, அக்கழகங்கள் வழங்கும் பரிசுகளையும் விருதுகளையும் வரதராசன் பெற்றுள்ளார். கடந்த ஆறு ஆண்டுகளாக, இயக்கம், பாடலாக்கம், மேடை அமைப்பு, ஒட்டு மொத்த நிர்வாகம் எனப் பல பொறுப்புகளையும் ஏற்று இசை மற்றும் நாட்டிய நாடகங்களையும் இவர் மேடையேற்றி வருகிறார். கடந்த மூன்று ஆண்டுகளாக, கம்பராமாயண வகுப்புகளையும் வாரம் தோறும் வரதராசன் நடத்தி வருகிறார்.	1819-2019 என்னும் இருநூறு ஆண்டு காலக் கட்டத்தில் சிங்கப்பூர் நாடு கண்ட ஏற்றம் குறித்து விவரிக்கும் நூல் இது. சிங்கப்பூரில் ஏற்பாடு செய்யப்பட்ட இருநூறு ஆண்டுக்கால கட்டக் கொண்டாட்டத்தை மனத்தில் வைத்து இந்த நூல் எழுதப்பட்டது. கல்வி, சாங்கி விமான நிலையம் ஆகிய இரண்டு துறைகளில் இந்நாடு கண்ட முன்னேற்றம் பற்றிப் புகழ்ந்து கூறும் 200 பாடல்கள் கொண்ட நூல் இது. முறையான கல்வித் திட்டம் இந்த இருநூறு ஆண்டுகளில் கண்ட வளர்ச்சியையும் சிங்கப்பூரின் பல விமான நிலையங்கள் பற்றியும் அவை எவ்வாறு இறுதியில் உலகத்தின் முதல்தர விமான நிலையம் என்ற பெருமையைத் தாங்கி நிற்கும் சாங்கி விமான நிலையமாக உருவெடுத்தன என்பது குறித்தும் பேசும் மரபுக் கவிதை – அறு சீர் விருத்தம்-பாடல்களைக் கொண்ட நூல் இது.

Singapore Book Council (Company No.: 201805935W)
90 Goodman Road, Blk E #03-32, Goodman Arts Centre Singapore 439053
+ 65 6342 5119 | info@bookcouncil.sg | www.bookcouncil.sg

பிரிவு: கவிதை

எண்.	எழுத்தாளர் / கதை தலைப்பு	சுயவிவரம்	கதை சுருக்கம்
2	சித்துராஜ் பொன்ராஜ் “இத்தாலியனாவது சுலபம்” (அகநாழிகை, 2019) 	சித்துராஜ் பொன்ராஜ் 18 வயதிலிருந்து தமிழிலும் ஆங்கிலத்திலும் கதைகள், கவிதைகள் எழுதி வருகிறார். இதுவரை தமிழில் “பெர்னுய்லியின் பேய்கள்” “விளம்பர நீளத்தில் ஒரு மரணம்” ஆகியநாவல்களையும், “மாறிலிகள்”, “ரெமோன் தேவதை ஆகிறான்” ஆகிய சிறுகதைத் தொகுப்புகளையும் எழுதியிருக்கிறார். “காற்றாய்க் கடந்தாய்”, “சனிக்கிழமைகுதிரைகள்” ஆகிய இரண்டு கவிதைத் தொகுப்புக்களையும்,“கதைசொல்லி யின் ஆயிரம் இரவுகள்” என்ற கட்டுரை நூலையும் வெளியிட்டுள்ளார். மேலும் “கௌண்டில்யன் சதுரம்”, “துப்பறியும் லலிதா” என்ற இரண்டு சிறுவர் நாவல்களை எழுதியுள்ளார்.	“இத்தாலியனாவது சுலபம்” சிங்கப்பூர் எழுத்தாளர் சித்துராஜ் பொன்ராஜ்-இன் 80 கவிதைகள் அடங்கிய தொகுப்பு. உலகமயமாகிவரும் சூழலில் தனது அடையாளத்தையும் கலாச்சாரத்தையும் தக்க வைத்துக்கொள்ள நினைக்கும் சிங்கப்பூர் தமிழர்களின் முன் நிற்கும் சவால்களை இக்கவிதைகள் பல கோணங்களிலிருந்து ஆராய்கின்றன. இந்த அலசலைச் செய்யும் விதத்தில் இத்தொகுப்பின் கவிதைகள் மூவாயிரம் ஆண்டு பழமை வாய்ந்த தமிழ் இலக்கிய பாரம்பரியத்தைத் தமக்குள் நிலை நிறுத்திக் கொள்ளும் அதே நேரத்தில் கவிதைகளில் பழக்கமாக்கிவிட்ட சித்திரங்களையும் உத்திகளையும் தள்ளி தமக்கென்று புதிய உத்திகளையும் சொல்லாடல்களையும் அமைத்துக் கொண்டுள்ளன. இத்தொகுப்பின் தலைப்பே சிங்கப்பூர் போன்ற பன்னாட்டு, பல கலாச்சாரச் சூழலில் வாழும் தமிழர்கள் எதிர்நோக்கும் அடையாளச் சவால்களைச் சொல்லும் விதமாக அமைந்திருக்கிறது. தனது மொழி, தனது கலாச்சாரம் என்ற பிணைப்பு உள்ளவனக்குக் கூட இணையம் வேறொரு அடையாளத்தை உடுத்திக் கொள்ளும் வாய்ப்பை எளிதில் வழங்குகிறது. இத்தகைய சூழலில் விருப்பம் இருந்தால் சந்தேகமே இல்லாமல் யாரும் இத்தாலியனாவது சுலபம்தான்.
3	சுபா செந்தில்குமார் “கடலெனும் வசீகர மீன்தொட்டி ” (Yaavarum Publisher, 2019) 	சுபா செந்தில்குமார் தமிழ்நாட்டில் உள்ள கும்பகோணம் நகரைச் சேர்ந்தவர். சிங்கப்பூரில் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக வசித்து வருகிறார். சிங்கப்பூர் தேசிய கலைகள்மன்றம் வழங்கும், தங்கமுனை விருதினை (கவிதைக்கான பிரிவில்), 2015 ஆம் ஆண்டும் (இரண்டாவது பரிசு), 2019 ஆம் ஆண்டும் (முதல் பரிசு) இவர் வென்றுள்ளார். இவரது கவிதைகள் சிங்கப்பூர் மற்றும் தமிழகத்தின் இதழ்களில் வெளிவந்துள்ளன. இது இவரது முதல் கவிதைத் தொகுப்பாகும்.	இந்த கவிதைத் தொகுப்பு மிக அடர்த்தியான கருப்பொருளைக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கவிதையும் சொல்லவரும் கருத்துகளைக் காட்சிப்படுத்தும் விதம் பிரம்மிப்பை ஏற்படுத்தும். தொகுப்பில் உள்ள கவிதைகள் தனிமை, பிரிவு, ஏக்கம், அயல்நாட்டு வாழ்க்கை, தவிப்பு, வலிகள், ஆசைகள், காதல், சமூக அவலங்கள் மற்றும் இயற்கை என்று பல திசைகளில் விரிகின்றன. இயற்கையையும், அழகியலையும் மட்டுமே இல்லாது சமகால வாழ்வில் இருக்கும் அரசியலையும் கவிதைகள் வெளிப்படுத்துகின்றன.

Singapore Book Council (Company No.: 201805935W)
90 Goodman Road, Blk E #03-32, Goodman Arts Centre Singapore 439053
+ 65 6342 5119 | info@bookcouncil.sg | www.bookcouncil.sg

பிரிவு: இலக்கியப் புதினம் அல்லாதவை

எண்.	எழுத்தாளர் / கதை தலைப்பு	சுயவிவரம்	கதை சுருக்கம்
1	அ. கி. வரதராசன் “கம்பனின் இராமன் மானுடனா மாலவனா?” (Vanathi Pathippakam, 2018) 	அ.கி. வரதராசன் தமிழ்நாட்டில் 1944ஆம் ஆண்டு பிறந்தவர். சிங்கப்பூரில் வேலையேற்க 1982 இல் வந்தவர். கடந்த 25 ஆண்டுகளாக, சிங்கப்பூர் குடிமகனாக வாழ்ந்து வருகிறார். மரபுக் கவிதைகள் எழுதுபவர். இவரது மரபுக் கவிதை நூல்கள் சிங்கையில் பல பரிசுகளைப் பெற்றுள்ளன. கம்பனை ஆய்வு செய்து பல நூல்களை எழுதியுள்ளார்.இந்நூல்கள் தமிழ்நாட்டிலுள்ள கம்பன் கழகங்களால் அவர்கள் நடத்தும் கம்பன் விழாக்களில் வெளியீடு கண்டு, அக்கழகங்கள் வழங்கும் பரிசுகளையும் விருதுகளையும் வரதராசன் பெற்றுள்ளார். கடந்த ஆறு ஆண்டுகளாக, இயக்கம், பாடலாக்கம், மேடை அமைப்பு, ஒட்டு மொத்த நிர்வாகம் எனப் பல பொறுப்புகளையும் ஏற்று இசை மற்றும் நாட்டிய நாடகங்களையும் இவர் மேடையேற்றி வருகிறார். கடந்த மூன்று ஆண்டுகளாக, கம்பராமாயண வகுப்புகளையும் வாரம் தோறும் வரதராசன் நடத்தி வருகிறார்.	இந்த புத்தகத்தில், கம்பனின் திறமைகளும், அவரது கதாபாத்திர உருவாக்கத்தில் அவர் காட்டும் ஒப்பற்ற நேர்த்தியும் ஆராயப்படுகின்றன. அதில், காப்பியநாயகன் ராமரை அவரது காவியம் கம்ப ராமாயணத்தில் ஒரு சாதாரண மனிதனாக சித்தரிப்பதை மையமாகக் கொண்டுள்ளது. ராமரின் செயல்களை கம்பன் எவ்வாறு தெய்வீக தன்மையின் வெளிப்பாடாக அல்லாமல், மாறாக பல்வேறு சூழ்நிலைகளில் ஒரு சராசரி மனிதனினுடையது என இப்புத்தகம் விளக்குகிறது. அகில இளங்கை கம்பன் கழகம் நடத்திய கம்பன் விழாவில் மார்ச் 2018 இல் இந்த புத்தகம் அறிமுகப்படுத்தப்பட்டது.
2	அழகுநிலா “சிறுகாட்டுச் சுனை” (Self published, 2018) 	எழுத்தாளர், மேடைப் பேச்சாளர் மற்றும் பயிற்றுவிப்பாளரான அழகுநிலா “ஆறஞ்சு” (2015), “சங் கன்ச்சில்” (2019) என்ற இரண்டு சிறுகதைத் தொகுப்புகளையும் “சிறுகாட்டுச் சுனை” (2018) என்ற சிங்கப்பூர் மரபுடைமை பற்றிய ஒரு கட்டுரைத் தொகுதியையும் எழுதி வெளியிட்டுள்ளார். இவர் குழந்தைகளுக்காக நான்கு படப் புத்தகங்கள எழுதியுள்ளார்: “கொண்டாம்மா கெண்டாமா” (2016), “மெலிஸாவும் மெலயனும்”(2016), “மெலிஸாவும் ஜப்பானிய மூதாட்டியும்” (2018), “பா அங் பாவ்” (2019). சிங்கப்பூர் புத்தக மன்றத்தின் ‘Beyond Words 2015’ போட்டியில் “கொண்டாம்மா கெண்டாமா” நூல் பரிசு பெற்றது. சமூகத்தில் கலாச்சார பண்பாட்டு விழுமியங்களை உருவாக்கும் முனைப்போடு கடந்த எட்டு ஆண்டுகளாக தொடக்கநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு வகுப்புகள் எடுத்து வருகிறார். பொறியியலில் முதுகலைப் பட்டதாரியான இவர் ACTA சான்றிதழும் பெற்றுள்ளார்.	சிங்கப்பூரை அறியாதவர்களுக்குக் களிநயத்தோடு கூடிய புதிய தகவல்களையும், பல்லாண்டுகளாக இங்கேயே வாழ்பவர்களுக்கு அவர்கள் அனேகமாகப் பெயரளவில் மட்டுமே அறிந்திருக்கும் ஒரு விஷயத்தைக் குறித்துச் செறிவுள்ள தகவல்களையும் நிதானமான பார்வைகளையும் வழங்குபவை இக்கட்டுரைகள். ஒவ்வொரு கட்டுரையும் தனித்துவமிக்கவை மற்றும் அவற்றின் சாராம்சம் வாசிப்பவர்களின் நினைவில் நீண்டிருக்கும். இந்நூல் அளவிற் சிறியது என்றாலும் சரளமான வாசிப்பின் பத்துக்கும் தீர்க்கமான சிந்தனைகளுக்குமான புதையல் வீடு.

பிரிவு: இலக்கியப் புதினம் அல்லாதவை

எண்.	எழுத்தாளர் / கதை தலைப்பு	சுயவிவரம்	கதை சுருக்கம்
3	சுப்ரமணியன் பாலா பாஸ்கரன் “சிங்கப்பூர்-மலேசியா: தமிழ் இலக்கியத் தடம் சில திருப்பம்?” (Self published, 2018) 	சுப்ரமணியன் பாலா பாஸ்கரன் ஒலிபரப்பாளர், பத்திரிகையாளர், ஆய்வாளர் என்று பல பரிமாணங்கள் கொண்டவர். மலாயாப் பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர். ஐந்து நூல்களின் ஆசிரியர். அவற்றுள் இரண்டு ஆங்கிலத்தில் எழுதப்பட்டவை. ஆங்கிலம், தமிழ், மலாய் மொழிகளில் பல கட்டுரைகள் எழுதியவர். “கோ. சாரங்கபாணியும் தமிழ் முரசும்: இன்றைய பார்வை” எனும் ஆய்வு நூலுக்கு 2018 சிங்கப்பூர் இலக்கியப் பரிசு வென்றவர். கவிமாலை அமைப்பின் கணையாழி விருது, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம்- சிங்கப்பூர் முஸ்தபா தமிழ் அறக்கட்டளை இணைந்து வழங்கிய கரிகாலன் விருது வாங்கியவர்.	ஒன்பது கட்டுரைகள் மற்றும் ஆறு நேர்காணல்கள் மூலம், சிங்கப்பூர் மற்றும் மலாயாவின் தமிழ் பத்திரிகையாளர்கள் மற்றும் எழுத்தாளர்களின் பயணம் மற்றும் அவர்களின் படைப்புகளைப் பற்றி, இந்த புத்தகம் சொல்கிறது. இரண்டாம் உலகப் போரும் அதன் ஜப்பானிய ஆக்கிரமிப்பும் நமது எழுத்துப் பாதையை எவ்வாறு திருப்பியது என்பதையும், ஜப்பானிய ஆட்சியின் கீழ், சிங்கப்பூரில் எழுதப்பட்ட இந்தியாவின் சுதந்திரத்திற்கான போராட்டத்தின் ஏராளமான தமிழ் சிறுகதைகளுடன், பிரிட்டிஷ் இந்தியாவில் தடைசெய்யப்பட்ட புத்தகங்களை தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு கோலாலம்பூரில் வெளியிடப்பட்டதையும் இது ஆராய்கிறது. நாராயணரின் இலக்கியப் படைப்பின் முதல் முழு சித்தரிப்பு இதுவாகும்.
4	வ ஹேமலதா “வாழைமர நோட்டு” (Self published, 2018) 	வ ஹேமலதா, கடந்த பத்து வருடங்களாக பல்வேறு தளங்களில் எழுதி வருகிறார். சிங்கப்பூர் மாத இதழான “தி சிராங்கூன் டைம்ஸ்” இல் இரண்டாம் உலகப்போர் தொடர்பான இவரது கட்டுரைத் தொடர் 17 மாதங்களுக்கு வெளிவந்தது. இவரது “வெயிற்துண்டுகள்” கவிதை சிங்கப்பூர் தேசிய கவிதைப் போட்டி 2018ல் முதல் பரிசைப் பெற்றது. இவரது சிறுகதை "பெயர்ச்சி" தங்கமுனை விருது 2019-இல் இரண்டாம் பரிசைப் பெற்றது. இவரது சிறுகதைகள் உள்ளூர் மற்றும் அகில உலக சிறுகதைப் போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளன. இவரது கதைகள் பல்வேறு நாளிதழ்களிலும், மாத இதழ்களிலும், இணைய இதழ்களிலும் வெளிவந்திருக்கின்றன. “வாழைமர நோட்டு” இவரது முதல் புத்தகம் ஆகும்.	வெறித்தாக்குதல்களுக்கு உள்ளானார்கள். ஏழ்மையும் உணவுப் பஞ்சமும் சிங்கப்பூரைப் பீடித்தது. ஜப்பானிய ஆதரவுடன் ஐ.என்.ஏ செழித்தது, அதே நேரத்தில் ஃபோர்ஸ் 136 இயக்கம் ஜப்பானியர்களுடன் போராட தோன்றியது. ஜப்பான் இறுதியாக நேச நாடுகளிடம் சரணடையும் வரை, நிகழ்ந்த நிகழ்வுகள் உலகளாவிய போக்குகளை மாற்றின.

பிரிவு: இலக்கியப் புதினம் அல்லாதவை

எண்.	எழுத்தாளர் / கதை தலைப்பு	சுயவிவரம்	கதை சுருக்கம்
5	பிச்சினிக்காடு இளங்கோ “என்னோடு வந்த கவிதைகள்” (Self published, 2018)  	பிச்சினிக்காடு இளங்கோ 21 நூல்களின் ஆசிரியர். கவிதை, கட்டுரை, நாடகம், சிறுகதை படைப்பாளர். சிங்கப்பூர் ஒலிபரப்புக் கழகத்தில் (ஒலி 96.8ல்) தயாரிப்பாளராகவும் படைப்பாளராகவும் பணியாற்றியவர். தமிழர் பேரவையின் “சிங்கைச்சுடர்” மாத இதழின் ஆசிரியாராகவும் “புதியநிலா” மாத இதழின் பொறுப்பாசிரியராகவும் பணியாற்றியவர். “கவிமாலை” என்ற அமைப்பின் நிறுவனர். இவர் எழுதிய நாடகங்களை சிங்கப்பூர் ரவீந்திரன் நாடகக் குழு, சிங்கப்பூர் தமிழ் இளையர் மன்றம், அவான்ட் நாடகக் குழு அரங்கேற்றியிருக்கிறது. தங்க முனை ஆறுதல் பரிசு பெற்றவர். தமிழ் முரசில் தொடர்ந்து கவிதைகள் எழுதியவர். இந்தியாவில் அனைத்திந்திய வானொலியில் பண்னை இல்ல செய்தியாளராகப் பணியாற்றியவர். வானொலிக்கு நாடகங்கள், இசைச்சித்திரங்கள் எழுதியவர். சிறந்த பேச்சாளர். பட்டிமன்றங்களில் கவியரங்கங்களில் பங்கேற்றவர், தலைமை தாங்கியவர். இப்பொழுது “மக்கள் மனம்” என்ற திங்களிதழை நடத்திவருபவர்.	எழுத்தாளரின் பயணத்தைப் பற்றிய கவிதை மற்றும் கட்டுரைகளின் தொகுப்பான “என்னோடு வந்த கவிதைகள்”, கவிதையின் சிறப்பு அம்சங்கள் மற்றும் கவிதை நம்மை எவ்வாறு ஈர்க்கிறது என்பதை ஆராய்கிறது. இது புகழ்பெற்ற கவிஞர்களுடனான சந்திப்புகளின் தாக்கத்தையும், ஒரு கவிஞரின் பரிணாமத்தையும் ஆராய்கிறது. இது கவிதையின் வளர்ச்சியை கவிஞருடன் இணைத்து, செயல்பாட்டில் பெறப்பட்ட அறிவையும், கல்வியறிவையும் பகிர்ந்து கொள்கிறது. வளரும் கவிஞர்களுக்கான ஒரு உந்துதல் புத்தகம், இது பீலே ஒரு நோபல் பரிசு பெற்ற நைஜீரிய கவிஞரை சந்தித்த படங்களை உள்ளடக்கியது. கவிஞர்களின் வளர்ச்சியையும் ஆராய்கிறது.

Singapore Book Council (Company No.: 201805935W)
90 Goodman Road, Blk E #03-32, Goodman Arts Centre Singapore 439053
+ 65 6342 5119 | info@bookcouncil.sg | www.bookcouncil.sg

பிரிவு: புதினம்

எண்.	எழுத்தாளர் / கதை தலைப்பு	சுயவிவரம்	கதை சுருக்கம்
1	சித்துராஜ் பொன்ராஜ் “மரயானை” (வம்சி books, 2019) 	சித்துராஜ் பொன்ராஜ் 18 வயதிலிருந்து தமிழிலும் ஆங்கிலத்திலும் கதைகள், கவிதைகள் எழுதி வருகிறார். இதுவரை தமிழில் “பெர்னுய்லியின் பேய்கள்” “விளம்பர நீளத்தில் ஒரு மரணம்” ஆகியநாவல்களையும், “மாறிலிகள்”, “ரெமோன் தேவதை ஆகிறான்” ஆகிய சிறுகதைத் தொகுப்புகளையும் எழுதியிருக்கிறார். “காற்றாய்க் கடந்தாய்”, “சனிக்கிழமைகுதிரைகள்” ஆகிய இரண்டு கவிதைத் தொகுப்புக்களையும்,“கதைசொல்லி யின் ஆயிரம் இரவுகள்” என்ற கட்டுரை நூலையும் வெளியிட்டுள்ளார். மேலும் “கௌண்டில்யன் சதுரம்”, “துப்பறியும் லலிதா” என்ற இரண்டு சிறுவர் நாவல்களை எழுதியுள்ளார்.	சிங்கப்பூரிலேயே வாழ்ந்த ஒரு வயதான தமிழர் தனது மனைவிக்கான ஈமச்சடங்குகளைச் செய்ய ராமேஸ்வரம் போக எண்ணுகிறார். ஆனால் இந்தியா அவருக்கு உணர்வால் அருகில் இருந்தும் பரிச்சியனில்லாத நிலமாகவே இருக்கிறது. அதனால் அவர் அடையும் அகச்சிக்கலை விவரிக்கும் நாவல்.
2	எம்.கே. குமார் “ஒந்தி” (Yaavarum, 2019) 	“மருதம்”, “5.12பிஎம்” போன்ற சிறுகதைத் தொகுப்புகளையும் “சூரியன் ஒளிந்தணையும் பெண்” என்ற கவிதைத்தொகுப்பின் ஆசிரியர். கண்ணதாசன் விருது, சுந்தர ராமசாமி விருது பெற்றவர்.	ஒந்தி (டிராகன் பல்லி) என்பது எட்டு சிறுகதைகளின் தொகுப்பாகும். இந்த தனித்துவமான சிங்கப்பூர் கதைகள் உள்ளூர் தமிழ் சமூகத்தின் வாழ்க்கை மற்றும் விருப்பங்களைப் பற்றிய விவரங்களை ஆராய்ந்து, தன்மை தரங்கள், நெறிமுறை சங்கடங்கள் மற்றும் மாறுபட்ட சமூக சக்திகளை கவனமாக பரிசீலிக்கின்றன. நல்லொழுக்கம், விலங்குகளின் உள்ளுணர்வு, ஆசை, அன்பு, மரணம் மற்றும் பிற மனித நோக்கங்களின் எல்லைகளில் பயணிப்பதன் மூலம் சிங்கப்பூரில் வாழ்க்கையின் வரம்புகள், நுணுக்கங்கள் மற்றும் தெளிவற்ற தன்மைகளை இந்த கதைகள் உயிர்ப்பிக்கின்றன. ஒரு ஒந்தி வானிலை தாங்க அதன் நிறத்தை மாற்றுவது போல, இந்த படைப்புகள் மொழி மற்றும் பாணி இரண்டிலும் பல்திறமையைக் காட்டுகின்றன.

பிரிவு: புதினம்

எண்.	எழுத்தாளர் / கதை தலைப்பு	சுயவிவரம்	கதை சுருக்கம்
3	யூசுப் ராவுத்தர் ரஜித் “வண்டியும் ஒரு நாள் ஓடத்திலேறும்” (Tamil Pattimandra Kalai Kazhagam, 2019) 	எழுத்தாளர், கவிஞர், கல்வியாளர் என்ற பன்முகக் கலைஞர். 29 நவம்பர் 1948ல் பிறந்தவர். இந்தியாவின் தமிழ்நாட்டில் கல்லூரியில் இயற்பியல் பேராசிரியராக பணியைத் தொடங்கி சிங்கப்பூரிலும் கல்விப்பணி ஆற்றும் இவர் இயற்பியலிலும், தத்துவத்திலும் முதுகலைப் பட்டம் பெற்றவர். இவரின் முதல் கவிதைத் தொகுப்பு 2007ல் வெளியீடு கண்டது. இதுவரை 3 சிறுகதைத் தொகுப்பும், 4 கவிதைத் தொகுப்பும், 1 நாவலும் எழுதியிருக்கிறார். இவரின் ஒரே நோக்கம் தமிழ் சமுதாயத்தின் பெருமைகளை தமிழ் சமூகத்திற்கு புதிய கோணத்தில் அறிவிக்க வேண்டும் என்பதே ஆகும். 2007ஆம் ஆண்டின் தங்கமுனை விருது கவிதைப் பிரிவில் இவருடைய கவிதைகள் முதல் பரிசு பெற்றிருக்கிறது.	“வண்டியும் ஒரு நால் ஓடதில் எறும்” என்பது ஒரு சிறுகதைத் தொகுப்பு, இது பன்மொழி சிங்கப்பூரில் தமிழ் பேசும் சமூகம் இணைவதற்கான வழிகளைப் பற்றி விவாதிக்கிறது. பெரிய எழுத்துருவில் அச்சிடப்பட்ட இந்த கதைகள், தமிழ் குடும்பங்களின் தினசரி பிரச்சினைகளை விவரிப்பதோடு அவற்றை எவ்வாறு சரிசெய்வது என்பதற்கான பரிந்துரைகளையும் வழங்குகின்றன. இந்தியாவில் பிறந்தவர் மீது சிங்கப்பூரரின் வெறுப்பும், சிங்கப்பூரில் பிறந்தவர் மீது இந்தியநாட்டவரின் வெறுப்பும், இரு தரப்பினரும் இறுதியில் தங்கள் அணுகுமுறைகளை எவ்வாறு மாற்றுகிறார்கள் என்பதை தலைப்பு கதை விவரிக்கிறது. உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் பற்றியது, இக்கதைகள்.

எஸ். எல். பி 2020 நடுவர்கள் (தமிழ் பிரிவுகள்)

பிரிவு: கவிதை

எண்.	நீதிபதி	சுயவிவரம்
1	க.து.மு. இக்பால் ` (தலைமை நீதிபதி) 	க.து.மு. இக்பால் பதினைந்து கவிதை நூல்களின் ஆசிரியர். சிங்கப்பூர் ஒலிபரப்புக் கழகத்தின் “பாடிப் பழகுவோம் “என்னும் நிகழ்ச்சிக்காக 200க்கும் மேற்பட்ட சிறுவர் பாடல்களை எழுதியுள்ளார். சிங்கப்பூர் பெருவிரைவு வண்டிகளில் 1995ல் வலம் வந்த இவருடைய “தண்ணீர்” என்னும் கவிதை, ஜெர்மனியின் ஹனோவர் நகரில் நடைபெற்ற எக்ஸ்போ 2000 (EXPO 2000) என்னும் கண்காட்சியிலும் இடம்பெற்றது. இவர் பெற்ற விருதுகளில் “தென்கிழக்கு ஆசிய இலக்கிய விருது” (2001), சிங்கப்பூர் அரசு வழங்கிய கலாசார விருது (2014) ஆகியவை அடங்கும்.
2	எம் எஸ் ஸ்ரீ லக்ஷ்மி 	முனைவர் எம் எஸ் ஸ்ரீ லக்ஷ்மி சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக்கழகம், நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் தேசிய கல்விக்கழகம், மலாயாப் பல்கலைக் கழகத்தின் இந்திய ஆய்வியல் துறை ஆகியவற்றில் விரிவுரையாளராகப் பணிபுரிந்தவர். சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக்கழகத்துக்காகப் பாடங்கள் எழுதியவர். இலக்கியத்துறையில் இவருக்கு உள்ள நுண்மாண் நுழைபுலம், விரிவான ஆழமான ஆய்வுப்பணி, கற்பிக்கும் பணியில் இவருக்கு உள்ள ஆழ்ந்த அனுபவம் ஆகியவை காரணமாக இவர் தமிழில் தகைசால் அறிஞராக மதிக்கப்படுபவர். இவர் சிங்கப்பூர், மலேசிய, தமிழ்நாட்டுத் தமிழ் இலக்கியங்களை ஆய்வுப்பொருண்மையாகக்கொண்டு முப்பது நூல்களையும் தொண்ணூற்று ஏழுக்கு மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதியுள்ளார். தமிழில் ஆர்வத்தைத் தூண்டுவதற்காக இவர் தம் ஆய்வுகளை நூலாகப் பதிப்பிக்கும் பணியில் மிகுந்த ஆர்வம் காட்டிவருகிறார். தேசிய நூலக வாரியத்தால் நடத்தப்படும் “வாசிப்போம் சிங்கப்பூர்” நிகழ்சிக்காகச் சிங்கையில் எழுதப்பட்டுள்ள மலாய்மொழிக் கதைகளைத் தமிழில் மொழிபெயர்த்ததன் மூலம் இவர் தமிழ் இலக்கியத்திற்கு வட்டாரமணம் சேர்த்துள்ளார்.
3	கருப்புசாமி சமயவேல் 	கவிஞர் சமயவேல் தமிழகத்தின் மூத்த கவிகளில் ஒருவர். இவரது முதல் கவிதைத் தொகுப்பு” காற்றின் பாடல்” 1987ல் வெளியாகி பலரது கவனத்தையும் ஈர்த்தது. மொத்தம் ஏழு கவிதைத் தொகுப்புகள், ஒரு சிறுகதைத் தொகுப்பு, இரண்டு கட்டுரைத் தொகுப்புகள், இரண்டு மொழி பெயர்ப்புக் கவிதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். “விளக்கு” அமைப்பு வழங்கும் “புதுமைப்பித்தன்” விருது, ஆனந்த விகடனின் “நம்பிக்கை” விருது ஆகியவற்றைப் பெற்றிருக்கி றார். 1957ல் தமிழகத்தில் தூத்துக்குடி மாவட்டத்தில் பிறந்த இவர் தற்சமயம் மதுரையில் குடும் பத்துடன் வசித்து வருகிறார். தொடர்ந்து கவிதைகள் எழுதும் இவர், மொழிபெயர்ப்பாளராகவு ம் செயல்படுகிறார்.

பிரிவு: இலக்கியப் புதினம் அல்லாதவை

எண்.	நீதிபதி	சுயவிவரம்
1	ஆ ரா சிவகுமாரன் (தலைமை நீதிபதி) 	இணைப் பேராசிரியர், டாக்டர் ஆ ரா சிவகுமாரன் நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த தேசியக் கல்விக் கழகத் தமிழ்த்துறையின் மேனாள் தலைவர். சிங்கப்பூர்க் கல்வி அமைச்சால் தயாரிக்கப்படும் தமிழ்மொழிப் பாடநூல்களின் மதியுரைஞராகப் பணியாற்றியவர். தேசியக் கல்விக் கழகத்தின் நல்லாசிரியர் விருதை ஆறு முறைகள் பெற்றவர். சிங்கப்பூரின் நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழியில் ஆய்வேட்டை எழுதி முனைவர் (PhD) பட்டம் பெறுவதற்கு முதன் முதலில் வழி வகுத்தவர், சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியம் தொடர்பாக முதன் முதலில் முனைவர் பட்டம் பெற்றவர். தனியாகவும், பேராசிரியர்களோடு இணைந்தும், பதிப்பாசிரியராகவும் இருந்து 16 புத்தகங்களை வெளியிட்டவர். அமெரிக்கா, ஜெர்மனி, கனடா முதலிய நாடுகளில் நடைபெற்ற பல அனைத்துலக ஆய்வரங்குகளில் கலந்துகொண்டவர். சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கத்தின் புரவலர். சிங்கப்பூர்த் திருமுறை மாநாட்டின் துணைத் தலைவர்.
2	மௌனகுரு சித்தார்த்தன் 	முனைவர் மௌனகுரு சித்தார்த்தன் அவர்களின் ஆராய்ச்சி, பல தள களப்பணியில் கவனமுடையது. அவரின் ஆராச்சி மானுடவியல், வரலாறு, தத்துவம் போன்ற துறைகளின் தழுவல்களை உள்ளடிக்கியது. முனைவர் மௌனகுரு தற்போது தேசிய சிங்கப்பூர் பல்கலைக்கழகத்தில், தெற்கு ஆசிய ஆய்வுகள் எனும் பட்டப்படிப்பின் துணை பேராசிரியராக பணிபுரிகிறார்.
3	யுவன் சந்திரசேகர் 	யுவன் சந்திரசேகர் மதுரை மாவட்டத்தில் உள்ள கரட்டுப்பட்டி என்னும் சிறு கிராமத்தில் பிறந்தவர். இவர் கவிதை, நாவல் போன்ற பல இலக்கிய படைப்புகளை வெளியிட்டுள்ளார். இவருடைய படைப்புகள் பல்வேறு இந்திய மொழிகளிலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. "தீரா பகல்", "ஒற்றறிதல்" மற்றும் "வேதாளம் சொன்ன கதை" போன்றவை இவரின் குறிப்பிடத்தக்க படைப்புகளில் அடங்கும். தற்போது, யுவன் தன் மனைவியுடனும் இரு பிள்ளைகளுடனும் சென்னையில் வசிக்கிறார்.

பிரிவு: புதினம்

எண்.	நீதிபதி	சுயவிவரம்
1	கனகலதா (தலைமை நீதிபதி) 	கனகலதா (லதா), “தீவெளி” (2003), “பாம்புக் காட்டில் ஒரு தாழை” (2004), “யாருக்கும் இல்லாத பாலை” (2016) ஆகிய மூன்று கவிதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். அவரின் “நான் கொலை செய்யும் பெண்கள்” என்னும் சிறுகதைத் தொகுப்பு 2008ல் சிங்கப்பூர் இலக்கிய விருதை வென்றது. ஆங்கிலம், ஜெர்மன், பிரெஞ்சு மொழிகளில் இவரது படைப்புகள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. ‘சிங்கப்பூர் கவிதை விழா’ எனும் அமைப்பின் நிறுவன இயக்குனர்களில் ஒருவர். லதா தமிழ் முரசு நாளிதழின் இணை ஆசிரியராகப் பணிபுரிகிறார்.
2	இரா. முருகன் 	இரா. முருகன் (முருகன் ராமசாமி) முன்னாள் கணினித் தொழில்நுட்ப நிர்வாகியாவார். இன்று தமிழிலும், ஆங்கிலத்திலும் நாவலாசிரியர், சிறுகதை எழுத்தாளர், கவிஞர், நாடக, திரைக்கதை ஆசிரியர் மற்றும் பத்திரிகை எழுத்தாளர்ாக இருக்கிறார். இவர் மலையாளம் – தமிழ் – ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்ப்பாளராக இருக்கிறார். எட்டு நாவல்களும், சிறுகதை, புனைவு அல்லாதவை, கவிதைத் தொகுப்புகள், தமிழில் தொழில்நுட்ப எழுத்து என நாற்பது இதர தொகுப்புகளையும் அவர் எழுதியிருக்கிறார்.
3	முகமது கஸிம் ஷனாவாஸ் 	முகமது கஸிம் ஷனாவாஸ் ஒரு கவிஞர், சிறுகதை எழுத்தாளர். இவரது “சுவை பொருட்டன்று” என்னும் கவிதை நூல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவர் ஒரு பல்துறை கட்டுரையாளர். இவரது தலைசிறந்த படைப்பான, “அயல் பசி” தெளிவான மற்றும் விவரமான கட்டுரைகளை உள்ளடக்கிய தொகுப்பாகும். இவரது “மூன்றாவது கை” சிறுகதை தொகுப்பு 2014 சிங்கப்பூர் இலக்கிய பரிசை வென்றது. இவரது கட்டுரைத் தொகுப்பு “நனவு தேசம்” 2016 சிறப்பு இலக்கிய பரிசை வென்றது. இதுவரை இரண்டு சிறுகதை தொகுப்பு நூல்களும், 5 கட்டுரை நூல்களும் எழுதியுள்ளார். தற்போது சிராங்கூன் டைம்ஸ் மாத இதழ் ஆசிரியராக பணிப்புரிகிறார்.

→ எழுத்தாளர்கள், புத்தக அட்டைகள் மற்றும் நீதிபதிகளின் படங்களை இங்கே பதிவிறக்கம் செய்யலாம்.

Singapore Book Council (Company No.: 201805935W)
90 Goodman Road, Blk E #03-32, Goodman Arts Centre Singapore 439053
+ 65 6342 5119 | info@bookcouncil.sg | www.bookcouncil.sg

சிங்கப்பூர் புத்தக மன்றத்தைப் பற்றி

சிங்கப்பூர் புத்தக மன்றம் (எஸ். பி. சி) ஐபிசி அந்தஸ்துள்ள ஒரு சுயாதீன தொண்டு நிறுவனம். சிங்கப்பூர் எழுத்தாளர்கள் மற்றும் இலக்கியங்களை ஆதரிப்பதற்காக 1968 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட எஸ். பி. சி, படைப்பாற்றல், கற்பனை, அசல் சிந்தனை மற்றும் பச்சாத்தாபம் ஆகியவற்றை வளர்ப்பதன் மூலம் நமது கற்பனை-தேசத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. எங்கள் நிகழ்ச்சிகள் படைப்பு எழுத்து, வாசிப்பு, விளக்கம், மொழிபெயர்ப்பு மற்றும் கதைசொல்லல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்றன. எங்கள் விழாக்கள், பயிற்சி பட்டறைகள் மற்றும் பயிலரங்கங்கள், அத்துடன் சிறந்த படைப்புகளை அங்கீகரிப்பதற்காக புத்தக விருதுகள் மூலம் பன்முக கலாச்சார, மாறுபட்ட இலக்கிய கலைத் துறையை வளர்ப்பதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

நோக்கம்: தரம், மாறுபட்ட சிங்கப்பூர் இலக்கியங்களுக்கான சர்வதேச அங்கீகாரம்.

குறிக்கோள்: ஒரு பன்முக கலாச்சார இலக்கிய கலைத் துறையை விருத்தி செய்தல், ஆதரித்தல் மற்றும் பரிந்துபேசுதல்.

பன்யன் ட்ரீ ஹோட்டல் அண்ட் ரிசார்ட்ஸின் (Banyan Tree Hotels and Resorts) இணை நிறுவனர் செல்வி கிளாரி சியாங் (Ms Claire Chiang), எஸ்.பி. சி-யின் தற்போது தலைவராக உள்ளார்.

வருடாந்த "குழந்தைகளின் உள்ளடக்கத்தின் ஆசிய விழா" (AFCC) உட்பட பல்வேறு விழாக்கள் ஏற்பாடு செய்தல்; இரு ஆண்டிற்கு ஒரு முறை தேசிய விருதான சிங்கப்பூர் இலக்கிய பரிசு போன்ற மதிப்புமிக்க விருதுகளை வழங்குதல்; #BuySingLit இயக்கத்தின் மூலம் சமூக நலனை ஆதரித்தல்; மற்றும் எங்கள் கல்விக்கழகத் திட்டங்களால் தொழில்முறை திறனை வளர்த்தல் மூலம் சிங்கப்பூரின் புத்தகங்கள் மற்றும் இலக்கிய கலைக் காட்சியை புத்தக மன்றம் உருவாக்கி ஆதரிக்கிறது.

ஏனென்றால் இது எல்லாம் ஒரு கதையுடன் தொடங்குகிறது.

எஸ்.பி.சி. க்கு 2019 முதல் 2021 வரையிலான காலப்பகுதியில் சிங்கப்பூர் தேசிய கலை மன்றம் பெரும்படியான நிறுவன திட்டத்தின் கீழ் ஆதரவளிக்கிறது.

→ மேலும் தகவலுக்கு, தயவுசெய்து www.bookcouncil.sg ஐப் பார்வையிடவும்.

Singapore Book Council (Company No.: 201805935W)
90 Goodman Road, Blk E #03-32, Goodman Arts Centre Singapore 439053
+ 65 6342 5119 | info@bookcouncil.sg | www.bookcouncil.sg

சிங்கப்பூர் இலக்கிய பரிசு பற்றி

1992 இல் நிறுவப்பட்ட சிங்கப்பூர் இலக்கிய பரிசு (எஸ். எல். பி), 80 க்கும் மேற்பட்ட கடந்த வெற்றியாளர்களுடன், சிங்கப்பூரின் சிறந்த இலக்கிய பரிசாகும். புதினம், கவிதை மற்றும் இலக்கியப் புதினம் அல்லாதவையை ஒரு குறிப்பிட்ட காலத்தில் சிங்கப்பூரிலோ அல்லது வெளிநாட்டிலோ வெளியிட்ட சிங்கப்பூர் குடிமக்களுக்கும் நிரந்தர குடியிருப்பாளர்களுக்கும் இராண்டிற்கு ஒரு முறை நடத்தப்படும் போட்டி இது. சிங்கப்பூரின் நான்கு அதிகாரப்பூர்வ மொழிகளான - சீன, ஆங்கிலம், மலாய் அல்லது தமிழில் இந்த படைப்பை வெளியிடப்பட்டிருக்கலாம்.

இந்த விருது ஒவ்வொரு பிரிவிலும் வெற்றியாளருக்கு $3,000 சிறந்த பரிசைக் கொண்டுள்ளது. கூடுதலாக, வெற்றியாளர்களுக்கு சிறப்பு பதக்கம் வழங்கப்படும்.

2004 ஆம் ஆண்டிலிருந்து இராண்டிற்கு ஒரு முறை மற்றும் சிங்கப்பூரின் நான்கு மொழிகளில் வெளியிடப்பட்ட படைப்புகளுக்கு எஸ். எல். பி விருது வழங்கப்பட்டது. இலக்கியப் புதினம் அல்லாதவை மற்றும் கவிதை வகைகளுக்கான பிரிவுகளை உள்ளடக்குவதற்காக இந்த விருது 2014 இல் விரிவாக்கப்பட்டது.

மொஹமட் லத்தீப் மொஹமட் (Mohamed Latiff Mohamed), யெங் ப்வே நொகோன் (Yeng Pway Ngon), கே.டி. எம் இக்பால் (K. T. M Iqbal), சிரில் வோங் (Cyril Wong), ஜோசபின் சியா (Josephine Chia), அமண்டா லீ கோ (Amanda Lee Koe) மற்றும் சோனி லீவ் (Sonny Liew) உள்ளிட்ட பல குறிப்பிடத்தக்க சிங்கப்பூர் எழுத்தாளர்கள் எஸ். எல். பி விருதினை வென்றுள்ளனர்.

→ மேல் விவரங்களுக்கு, https://bookcouncil.sg/awards/singapore-literature-prize-ஐப் பார்வையிடவும்.

Singapore Book Council (Company No.: 201805935W)
90 Goodman Road, Blk E #03-32, Goodman Arts Centre Singapore 439053
+ 65 6342 5119 | info@bookcouncil.sg | www.bookcouncil.sg